**IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT JUDGE,**
**KANNIYAKUMARI AT NAGERCOIL.**

<u>10.07.2026</u>

<u>O.S. No. 331/2022</u>

P.W. 1 திரு. அண்ணாதுரை

சாட்சி மீண்டும் இன்று அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு விசாரிக்கப்படுகிறார்.

**<u>கூடுதல் குறுக்கு விசாரணை தொடர்ச்சி (பிரதிவாதி தரப்பில்) -</u>**

2007 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட ஐந்து பேர் குழுவில் இந்த வழக்கின் மூன்றாவது வாதியின் ஒரு உறுப்பினரா என்றால் சரிதான். கீழ தெருவில் வேறு சமுதாய மக்களும் உள்ளனரா என்றால் உள்ளனர். 2021 ஆம் ஆண்டு பிரதிவாதிக்கு அனுப்பிய வழக்கறிவிப்புக்கு முன்பு அனைத்து ஆவணங்களையும் பரிசீலனை செய்துதான் அனுப்பப்பட்டது என்றால் சரிதான். 2009, 2012, 2015, 2018 மற்றும் 2021 ல் கூட்டப்பட்ட பொதுக்குழுவிற்கு நீதிமன்றத்திலிருந்து முன் அனுமதி பெறப்பட்டதா என்றால் மேற்சொன்ன பொதுக்குழுவிற்கு மட்டுமல்ல 2024 ல் பொதுக்குழு கூட்டியதற்கும் அனுமதி பெறவில்லை என்றால் சரிதான். ஏனெனில் சமுதாயத்தில் டிரஸ்டிகளுக்குள் தகராறு இருந்தால் மட்டுமே நீதிமன்ற வழிகாட்டுதலின்படி அனுமதி பெற்று தேர்தல் நடத்தப்பட வேண்டும். தகராறு இல்லை என்றால் நீதிமன்ற அனுமதி தேவையில்லை. பிரதிவாதிக்கு அனுப்பிய வழக்கறிவிப்பில் நாங்கள் பொதுக்குழுவில் தேர்ந்தெடுக்கப்பட்ட டிரஸ்டிகள் என்று குறிப்பிட்டிருந்தீர்களா என்றால் டிரஸ்டி என்று குறிப்பிட்டுள்ளோம். பிரதிவாதி பெயரில் முந்தைய

டிரஸ்டிகள் திரு. சிதம்பரம் மற்றும் திரு. நடராஜ பிள்ளை அவர்களும் எழுதி கொடுத்த கிரயப் பத்திரத்தை நான் பார்த்துள்ளேனா என்றால் பார்த்துள்ளேன். மேற்படி ஆவணத்தில் இரு இன சொத்துக்கள் சொல்லப்பட்டிருந்தது. அதில் ஒன்று இந்த வழக்கு பட்டிகை சொத்து மற்றொன்று ஜாமீன் சொத்து என்றால் அந்த சொத்து இந்த வழக்கின் சம்பந்தம் இல்லை. ஜாமீன் சொத்தும், வழக்கு சொத்தும் ஒன்றா என்றால் சரியல்ல. மேற்படி ஆவணத்தில் குறிப்பிடப்பட்டிருந்த ஜாமீன் சொத்து பற்றி விசாரித்து தெரிந்து கொண்டேனா என்றால் ஞாபகம் இல்லை. எனது பிராதில் அந்த ஜாமீன் சொத்து ஒரு கற்பனை சொத்து என்று குறிப்பிட்டிருந்தது, எந்த ஆவணத்தின் படி குறிப்பிட்டிருந்தேன் என்றால் அதை பற்றி நான் விசாரிக்கவில்லை. என்னிடம் காண்பிக்கப்படும் பாறசாலை சார் பதிவாளர் அலுவலக ஆவண எண். 3505/1/1983 ஆவணம் வாதி சமுதாயத்தின் பேரில் வாங்கப்பட்ட ஆவணமா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி ஆவணம் படி மேற்படி ஜாமீன் சொத்து டிரஸ்டி பெயரில் இஷ்டதானப்படி கிடைத்தது என்றால் சரியல்ல. மேற்படி ஆவணங்கள் உங்கள் அலுவலகத்தில் உள்ளன என்றும் வேண்டுமென்றே இந்த வழக்கின்படி பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ. 6 ஆவணம் நாகர்கோவில் சார் பதிவாளர் அலுவலகத்திலிருந்து நகலிலிருந்து எடுக்கப்பட்ட சான்றாவணம் என்றால் சரிதான். மேற்படி சொத்து சம்பந்தமான குறிப்புகள் நாகர்கோவில் சார் பதிவாளர் அலுவலக வில்லங்க பதிவேட்டுகளில் துலங்கும் என்றால் சரிதான். மேற்படி வா.சா.ஆ. 6 ஆவணம் பாறசாலையில் சார் பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டிருந்தாலும், பின்னர் மேற்படி ஆவணம்

நாகர்கோவில் சார் பதிவாளர் அலுவலகத்தில் குறைவு முத்திரைக் கட்டணம் செலுத்தி பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. இந்த வழக்கு சம்பந்தமான வழக்கறிவிப்பு அனுப்பிய பின்னர் கரத்தீர்வை (Revenue Tax) மற்றும் சிட்டா செலுத்தப்பட்டதா என்றால் வழக்கறிவிப்பிற்கு முன்பும், பின்பும் வாதி சமுதாயத்தின் பேரில் வரி செலுத்தப்பட்டுள்ளது. 2022 க்கு முன்பு வழக்கு பட்டிகை சொத்து சம்பந்தமான வாதி சமுதாயத்தின் பேரில் வரி செலுத்தியதற்கான ரசீது இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய முடியுமா என்றால் தாக்கல் செய்ய முடியும். மேற்படி சிட்டா மற்றும் கரத்தீர்வைகள் (Revenue Tax) வாதி சமுதாயத்தின் பேரில் இல்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ. 12 ஆவணத்தில் 1975 ல் அ பதிவேட்டில் இருந்த ஆதிமாமுனிவர் வேலாயுத பணிக்கர் மடம் ஒரு தரப்பினர் இல்லை என்றால் சரியல்ல. மேற்படி வழக்கில் சொத்துக்கள் யார் பெயரில் இருந்ததோ அவர்கள் எல்லாம் தரப்பினர் இல்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ. 12 வழக்கானது மேற்படி முத்தாரம்மன் கோவில் ஒரு சமுதாய கோவிலா, இல்லையா என்பதை தீர்மானிப்பதற்ககாக போடப்பட்ட வழக்கு என்றால் சரியல்ல. வா.சா.ஆ. 1 ஆவண வழக்கின் முத்தாரம்மன் கோவில் என்று தீர்மானிக்க தாக்கல் செய்யப்பட்டது என்றால் ஞாபகம் இல்லை. பிரதிவாதிக்கு கிரயம் செய்யப்பட்ட ஆவணத்தில் குறிப்பிட்டுள்ள பணம் வாதி சமுதாய கணக்கில் காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. மேற்படி கணக்கு பட்டியலை தாக்கல் செய்ய முடியுமா என்றால் பழைய ஆவணம் என்பதால் தற்சமயம் தாக்கல் செய்ய முடியாது. வாதிகளுக்கு இந்த வழக்கை தாக்கல் செய்ய எந்த முகாந்திரமும் இல்லை என்றால் சரியல்ல. பொய்யான

வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரியல்ல. மேற்படி வழக்கில் என்னிடம் காண்பிக்கப்படும் 16.08.1991 ஆம் தேதியில் மேற்படி வழக்கில் வாதி பக்கம் தாக்கல் செய்த முழுத் தொகையும் பெற்றுக் கொண்டதற்கான ரசீதுதானா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. இந்த வழக்கு நிலைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.